www.Padasalai.Net www.Trbtnpsc.Com

# 11 - STD அரையாண்டுத் தேர்வு - 2023

பதிவு எண்

நேரம்: 3.00 மணி **பொருளியல்** மதிப்பெண்கள்: 90

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும். 20 x 1 = 20

1. பொருளாதாரத்தில் நாம் படிக்கும் அடிப்படைப் பிரச்சனை
   அ) எல்லையற்ற விருப்பங்கள் ஆ) அளவற்ற வளங்கள்
   இ) பற்றாக்குறை ஈ) நம் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான உத்தி
2. தனிக்கருத்திலிருந்து பொதுக்கருத்தைப் பெறும் முறை
   அ) பகுத்தாய்வு முறை ஆ) தொகுத்தாய்வு
   இ) இயல்புநிலை அறிவியல் ஈ) நெறிமுறை அறிவியல்
3. கீழ்கண்ட வாய்ப்பாட்டின் மூலம் இறுதிநிலைப் பயன்பாட்டை அளவிடலாம்
   அ) $TU_n - TU_{n-1}$ ஆ) $TU_n - TU_{n+1}$ இ) $TU_n + TU_{n-1}$ ஈ) $TU_n + TU_{n+1}$
4. தேவைநெகிழ்ச்சி ஒன்றுக்குச் சமமாக இருக்கும்போது அது ______
   அ) அலகுத்தேவை நெகிழ்ச்சி ஆ) முற்றிலும் நெகிழ்ச்சியுள்ளது
   இ) முற்றிலும் நெகிழ்ச்சியற்ற தேவை ஈ) மிகைத்தேவை
5. சமஉற்பத்திக்கோட்டின் வேறு பெயர்
   அ) நெகிழ்ச்சியற்ற அளிப்புக்கோடு ஆ) சம இறுதிநிலைப் பயன்பாட்டுக்கோடு
   இ) நெகிழ்ச்சியற்ற தேவைக்கோடு ஈ) சம உற்பத்தி வளைகோடு
6. கீழ்கண்டவற்றுள் எது நிலத்தின் சிறப்பியல்பு அல்ல?
   அ) குறை அளிப்பு ஆ) இடம்பெயரும் தன்மையுடையது
   இ) பலவகைப்படும் ஈ) இயற்கையின் கொடை
7. சராசரி மாறாச் செலவுக்கான வாய்ப்பாடு
   அ) TC / Q ஆ) TVC / Q இ) TFC / Q ஈ) TAC / Q
8. ஒரு புத்தகம் 15 வீதம் 20 புத்தகங்களை விற்கிறார், எனில் அவருக்கு கிடைக்கும் மொத்த வருவாய்
   அ) 100 ஆ) 200 இ) 300 ஈ) 400
9. விலையின் மற்றொரு பெயர் ______
   அ) சராசரி வருவாய் ஆ) இறுதிநிலை வருவாய்
   இ) மொத்த வருவாய் ஈ) சராசரி செலவு
10. முற்றுரிமைப் போட்டியின் முக்கிய பண்பு ______
    அ) ஒரேவிதமான உற்பத்தி ஆ) விற்பனைச்செலவு
    இ) ஒரு விற்பனையாளர் ஈ) ஒருவாங்குபவர்
11. கடன்நிதிக் கோட்பாட்டின்படி கடன் நிதிகளின் அளிப்பு இதற்குச் சமமாகும்
    ஆ) S+BC+DH+DI அ) I+DS+DH+BM இ) S+DS+BM+DI ஈ) S+BM+DH+DS
12. புத்தாக்க இலாபக் கோட்டை வழங்கியவர் ______
    அ) ஹாலே ஆ) சும்பீட்டர் இ) கீன்ஸ் ஈ) நைட்
13. V.K.R.V இராவ் இவரின் மாணவராக இருந்தார்
    அ) J.M.கீன்ஸ் ஆ) காலின் கிளார்க் இ) ஆடம் ஸ்மித் ஈ) ஆல்பிரட் மார்ஷல்
14. இந்தியாவின் பசுமைப் புரட்சியின் தந்தை என்றழைக்கப்படுபவர்
    அ) M.S.சுவாமிநாதன் ஆ) காந்தி
    இ) விஸ்வேஸ்வரய்யா ஈ) N.R. விஸ்வநாதன்
15. வெளிநாட்டு முதலீடு ______ உள்ளடக்கியது
    அ) FDI மட்டும் ஆ) FPI மற்றும் FFI இ) FDI மற்றும் FPI ஈ) FDI மற்றும் FFI
16. ஊரகப் பொருளாதாரத்தின் முக்கிய இயல்பு
    அ) வேளாண்மையைச் சார்ந்திருத்தல் அ) அதிக மக்கள்தொகை அடர்த்தி
    இ) குறைந்தளவு மக்கள்தொகை ஈ) ஏற்றத்தாழ்வு குறைவு
17. ஆசியாவின் டெட்ராய்ட் என அழைக்கப்படும் நகரம்
    அ) கோயம்புத்தூர் ஆ) சென்னை இ) மதுரை ஈ) திருப்பூர்



CamScanner
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

18. இந்தியாவின் நெல் கிண்ணம் என்று அழைக்கப்படும் மாநிலம்
அ) உத்திரப்பிரதேசம் ஆ) மத்தியப்பிரதேசம் இ) தமிழ்நாடு ஈ) கேரளா

19. தொகையீடு என்பது _______ என்பதின் தலைகீழ் செயல்பாடாகும்
அ) வேறுபாடு ஆ) கலவை இ) கலந்த கலவை ஈ) வகையீடு

20. MUDRA வங்கி அமல்படுத்தப்பட்ட ஆண்டைக் குறிப்பிடுக
அ) 2000 ஆ) 2005 இ) 2010 ஈ) 2015

II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி (வினா எண். 30 கட்டாயம்) 7 x 2 = 14

21. பகுத்தாய்வு முறையின் பொருள் கூறுக?
22. கிஃபன் பொருள்கள் எவை? அவை ஏன் அவ்வாறு அழைக்கப்படுகின்றன?
23. உற்பத்திக்காரணிகளை வகைப்படுத்து?
24. பொருளாதாரச் செலவு என்றால் என்ன?
25. விற்பனைச்செலவு என்றால் என்ன?
26. நீர்மை விருப்பத்தின் பொருள் யாது?
27. தொழில்நுட்பத்தெரிவு பற்றி அமர்த்தியா சென் கூறுவது என்ன?
28. மனித வளர்ச்சிக் குறியீட்டெண்ணைக் கணக்கிட உதவும் குறியீடுகளைக் கூறுக?
29. மறைமுக வேலையின்மை என்றால் என்ன?
30. மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியை வரையறு?

III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி (வினா எண். 40 கட்டாயம்) 7 x 3 = 21

31. பணிகளின் பல்வேறு இயல்புகள் யாவை?
32. சமநோக்கு வளைகோடுகளின் பண்புகள் யாவை?
33. தொழில் முனைவோரின் பணிகள் யாவை?
34. வாய்ப்புச்செலவை எடுத்துக்காட்டுகளுடன் வரையறு?
35. நிறுவனம் மற்றும் தொழிற்சாலைக்கு இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?
36. வாரம், போலிவாரம் - வேறுபடுத்துக?
37. 16x-4 = 68 +7x என்றால் தேவையான x இன் மதிப்பினைத் தீர்க்க?
38. SHG -இன் பண்புகளைக் கூறுக?
39. தமிழ்நாட்டின் சிறப்புகளில் ஏதேனும் மூன்றினைக் கூறு?
40. GST என்றால் என்ன? அதன் நன்மைகளை எழுதுக?

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி 7 x 5 = 35

41. அ) பொருளியலில் பகுத்தாய்வு மற்றும் தொகுத்தாய்வு முறைகளின் படிகளை விளக்குக?
(அல்லது)
ஆ) குறைந்துசெல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதியை வரைபடத்துடன் விவரி?

42. அ) சமஅளவு உற்பத்திக்கோட்டின் பண்புகளை வரைபடத்துடன் விவரி?. (அல்லது)
ஆ) மொத்தச்செலவு $Tc=10+Q^3$, Q=5 எனில் AC, AFC, AVC, TFC, TVC ஆகியவற்றைக் கண்டுபிடி?

43. அ) நிறைவுப்போட்டியின் இயல்புகளை விளக்குக? (அல்லது)
ஆ) ரிக்கார்டோவின் வாரக்கோட்பாட்டை எடுத்துக்காட்டுடன் விவரி?

44. அ) இந்தியப் பொருளாதாரத்தின் வலுவான அம்சங்களை விவரி?
(அல்லது)
ஆ) இந்திய ஐந்தாண்டுத் திட்டங்களின் செயல்பாடுகளை விவரி?

45. அ) சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் நோக்கங்களையும் பண்புகளையும் விளக்குக?
(அல்லது)
ஆ) காரகப் பொருளாதாரத்தின் பண்புகள் விசித்திரமானவை விவாதி?

46. அ) தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு வகையான ஆற்றல் வளங்களை விவரி? (அல்லது)
ஆ) தேவை விதி மற்றும் அதன் விதிவிலக்குகளை விவரி?

47. அ) வகைக்கெழு கணிதமுறையைப் பயன்படுத்தி தேவையின் சமன்பாடு P=60-0.2Q ஆக இருக்கும்போது i)P=0, ii) P=20, iii) P=40 என்றால் தேவை நெகிழ்ச்சிக்கெழு மதிப்பு காண்க
(அல்லது)
ஆ) பொருளியல் பற்றிய பல்வேறு இலக்கணங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக?



CamScanner
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

# பரமக்குடி சௌராஷ்ட்ர மேல்நிலைப் பள்ளி பரமக்குடி.

பதினோறாம் வகுப்பு விடைக் குறிப்பு

I அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 20 X 1 = 20

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | இ | பற்றாக்குறை | 11 | அ | S+BC+DH+DI |
| 2 | ஆ | தொகுத்தாய்வு | 12 | ஆ | சும்பீட்டர் |
| 3 | அ | TUn-TUn-1 | 13 | அ | JM.கீன்ஸ் |
| 4 | அ | அலகுத் தேவை நெகிழ்ச்சி | 14 | அ | MS.சுவாமிநாதன் |
| 5 | ஈ | சம உற்பத்தி வளைக்கோடு | 15 | இ | FDI மற்றும் FPI |
| 6 | ஆ | இயங்கும் தன்மையுடையது | 16 | அ | வேளாண்மையைச் சார்ந்திருத்தல் |
| 7 | இ | TFC/Q | 17 | ஆ | சென்னை |
| 8 | இ | 300 | 18 | இ | தமிழ்நாடு |
| 9 | அ | சராசரி வருவாய் | 19 | ஈ | வகையீடு |
| 10 | ஆ | விற்பனைச் செலவு | 20 | ஈ | 2015 |

II இரண்டு மதிப்பெண் வினாவிடை **கட்டாய வினா 30** (7 x 2 = 14)

21. **பகுத்தாய்வு** : பகுத்தாய்வு என்பது பொதுக்கருத்திலிருந்து தனிக் கருத்தை பெறுவது ஆகும். (அல்லது) முழுமைத் தொகுதியினைப் பற்றிய கருத்தின் அடிப்படையில் அதன் தனி அலகு ஒன்றினைப் பற்றி கூறுவதாகும்.

22. **கிப்பன் பொருள்கள்** : தாழ்ந்த ரக பண்டங்களின் விலை குறையும் போது ஏழைகள் அவற்றை குறைவாக வாங்குவர் விலை கூடும் போது அதிகம் வாங்குவர். எ.கா. அரிசி , கோதுமை.

23. **உற்பத்திக் காரணிகள்** : நிலம் மற்றும் உழைப்பு என்பது முதன்மைக் காரணிகளாகும் மூலதனம் மற்றும் அமைப்பு என்பது இரண்டாம் நிலை உற்பத்திக் காரணிகளாகும்.

24. **பொருளாதாரச் செலவு:** வெளிப்படையாக மற்றும் உள்ளார்ந்த செலவுகளை உள்ளடக்கியதே பொருளாதார செலவு எனப்படும். பொருளாதார செலவு = உள்ளார்ந்த + வெளியுறு செலவு

25. **விற்பனைச் செலவு :** விற்பனையை அதிகரிக்க மேற்கொள்ளும் விளம்பரச் செலவுகள் அனைத்தும் விற்பனைச் செலவகள் எனப்படுகின்றன.

26. **நீர்மை விருப்பம் :**ரொக்கப் பணமாக கையில் வைத்திருப்பதே நீர்மை விருப்பம் ஆகும்.(அல்லது) மக்கள் பத்திரங்கள்,பங்குகள்,மாற்றுச்சீட்டுகள்,நிலம்,கட்டிடம்,தங்கம் போன்றவைகளாக அல்லாமல்,ரொக்கப்பணமாக கையில் வைத்திருப்பதே நீர்மை விருப்பம் ஆகும்.

27.**தொழில் நுட்ப தெரிவு:** மூலதன செறிவு நுட்ப முறையில் உழைப்பாளர்கள் உபரியாக உள்ள பொருளாதாரத்தில் வேலைவாய்ப்புக்களை அதிகரிப்பது கடினம் என்று தொழில்நுட்ப தெரிவு என்ற புத்தகத்தில் சென் குறிப்பிடுகிறார்.

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

28.**மனித வளர்ச்சி குறியீட்டு எண்:** 1.வாழ்நாள் என்பது பிறப்பின்போது வாழ்நாள் எதிர்பார்ப்பின்மூலம் கணக்கிடப்படுகிறது. 2. கல்வித்தகுதி 3.வாழ்க்கைத்தரம் - வாங்கும் சக்தியின் அடிப்படையிலான தனிநபர் வருமானத்தை கொண்டு கணக்கிடப்படுகிறது.

29. **மறைமுக வேலையின்மை:** வேலையிலிருந்து சிலரை நீக்கினாலும்,உற்பத்தியின் அளவு குறையாது. ஏனென்றால் அவர்களின் இறுதிநிலை உற்பத்தி திறன் ஒன்றுமில்லை. இது மறைமுக வேலையின்மை அல்லது குறை வேலையுடைமை எனப்படும்.

30.**மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி:** ஒரு மாநிலத்தின் ஒராண்டில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த பணமதிப்பாகும்.

**III.** மூன்று மதிப்பெண் வினா விடைகள்: **கட்டாய வினா 40** **(7 x 3 = 21)**

31.**பணிகளின் பல்வேறு இயல்புகள்:** (ஏதேனும் 3)

1.புலனாகா பொருட்கள்: இவற்றிற்கு உருவ அடையாளம் இல்லை. மற்ற பண்டங்களுடன் தொடர்புடையவை. எ.கா.நன்மதிப்பு

2. உருவாக்குபவரிடமிருந்து பிரிக்க இயலாது.

4. பணிகள் அழியக்கூடியவை

32. **சமநோக்கு வளைகோட்டின் பண்புகள்:**

1.வலப்புறமாக கீழ்நோக்கி சரிந்து செல்லும்

2.தோற்றுவாய் நோக்கி குவிந்து காணப்படும்.

3.ஒன்றையொன்று வெட்டிக்கொள்ளாது.

33.**தொழில் முனைவோரின் பணிகள்** (ஏதேனும் 3)

1.இலாபகரமான முதலீட்டு வாய்ப்புகளை தேர்ந்தெடுத்தல்

2.புத்தாக்க பணி

3. சரியான உற்பத்திக்காரணகளின் கலவையை பயன்படுத்துபவர்

4. இடர்பாடுகளை ஏற்றல்

5.உற்பத்தி அளவை தீர்மானித்தல்

34.**வாய்ப்புச்செலவு :** என்பது அடுத்த சிறந்த மாறுபட்ட செலவைக் குறிக்கும். எ.கா. விவசாயி தன் நிலத்தில் கரும்பு அல்லது நெல் விளைவிக்க முடியும். அவ்விவசாயி நெல் விளைவித்தால் நெல்லின் வாய்ப்புச் செலவு என்பது விட்டுத்தந்த கரும்பின் உற்பத்தி அளவே ஆகும்.

35.**நிறுவனம்:** இது ஒரு தொழில் இருக்கும் ஒற்றை உற்பத்தி அலகு ஆகும்.பொருள் அல்லது பணியை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் ஒரு அமைப்பு நிறுவனம்.எ.கா.சங்கர் சிமெண்ட்

தொழில்:- இது பொருளாதாரத்தில் ஒரே மாதிரியான பொருள் அல்லது பணியை உற்பத்தி செய்யக்கூடிய பல நிறுவனங்களின் தொகுப்பே தொழில் ஆகும். எ.கா.சிமெண்ட் தொழில்

36. **வாரம்,போலி வாரம்:-** வாரம் என்பது நிலத்தின் விளைச்சலில் இருந்து ஒரு பகுதியை நில உரிமையாளருக்கு கொடுப்பதே ஆகும். வாரம் விலையில் சேரும். இது நிலத்திற்கு வழங்கப்படுவது ___ரீக்கார்டோ

**போலி வாரம்:-** இயந்திரங்களில் இருந்து உற்பத்திக்காக மனிதனால் உருவாக்கப்பட்ட கருவிகளில் இருந்தும் பெறப்படும் வாரமே போலி வாரம் எனப்படும். போலிவாரம் விலையில் சேராது. இது மனிதனால் உருவாக்கப்பட்ட உபகரணங்களுக்கு வழங்கப்படுகிறது. - மார்ஸல்

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

37. $16x - 7x = 68+4$, $9X = 72$, $X=72 / 9 = 8$

38. **SHG யின் பண்புகள்:-**

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது வங்கிக்கடன், மற்றும் அரசாங்க மானியம் வழங்கி வருவாய் ஆதாரங்களை பெருக்கி பயனாளிகளை ஏழ்மைக்கோட்டிற்கு மேல் முன்னேற்றமடையச் செய்வதாகும்.

1. சுயஉதவிக்குழுவின் உறுப்பினர்கள் பொதுவாக ஒரே மாதிரியான பொருளாதார நிலையில் உள்ளவர்கள் குழுவினரிடையே உள்ள புரிந்துணர்வின் அடிப்படையில் உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கின்றனர்.
2. பெரும்பாலான சுயஉதவிக்குழுக்கள் 10 முதல் 20 பெண் உறுப்பினர்களை கொண்டவை.
3. SHG தமக்கென்று வடிவமைக்கப்பட்ட சட்டங்களையும் விதிமுறைகளையும் கொண்டுள்ளன. தொடர்ச்சியாக கூட்டம் நடத்துதல் மற்றும் முறையாக பதிவேடுகளை பராமரித்தல், சேமிப்பு மற்றும் கடன் வழங்குதல் ஆகியவைகளை கடைபிடிக்கின்றன.

39. **தமிழ்நாட்டின் சிறப்புகள்:-**

1. இந்திய அளவில், ஏழை மக்களின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் குறைவு
2. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழகம் இரண்டாவது இடத்தில் உள்ளது.
3. மனித வளர்ச்சி குறியீட்டில் மூன்றாவது இடம்
4. தொழிற்சாலை எண்ணிக்கையில் முதலிடம்
5. நிதி ஆயோக் அறிக்கையின்படி சுகாதார குறியீட்டில் 3வது இடம்.
6. அதிக எண்ணீககையில் பொருளியல் கல்லூரிகள்
7. குறு சிறு நடுத்தர நிறுவன முதலீட்டில் முதலிடம்

40. **GST** பண்டங்கள் மற்றும் பணிகள் மீதான வரி என்பது நுகர்வோர் நுகரும் பண்டங்கள் மற்றும் பணிகள் மீது விதிக்கப்படும் வரியாகும். இது 2017ம் ஆண்டு ஜுலை திங்கள் முதல் நாளன்று நடைமுறைக்கு வந்தது.

**நன்மைகள்** 1. அடுக்கு வரி விளைவுகளை நீக்கியது. 2.ஒரு முனை வரியாக உள்ளது. 3.பதிவுக்கான வாசலாக உள்ளது. 4.இணையவழி வசதி மூலம் எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. 5.மின்னணு வணிகம் வரையறுக்கப்பட்டுள்ளது. 6.அமைப்பு ரீதியற்ற துறையை ஒழுங்குபடுத்துகிறது.

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி ஐந்து மதிப்பெண் வினாவிடை (7 x 5 = 35)

41.அ) **பொருளியலில் பகுத்தாய்வு மற்றும் தொகுத்தாய்வு:**

பகுத்தாய்வு முறை: பகுத்தாய்வு முறை என்பது முழுமை தொகுதியினை பற்றிய கருத்தின் அடிப்படையில் தனி அலகு ஒன்றினைப் பற்றி கருத்து கூறுவதாகும். 2 ½

படிகள்: ஏதேனும் 4

தொகுத்தாய்வு முறை: தனிக்கருத்தில் இருந்து பொதுக்கருத்தைப் பெறுவது 2 ½

படிகள்: ஏதேனும் 4

41.ஆ) **குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி:**

1.இலக்கணம்:- ஒருவரிடம் உள்ள பண்டத்தின் இருப்பு கூடுகின்றபொழுது ஒவ்வொரு கூடுதல் அலகிலிருந்தும் கிடைக்கும் பயன்பாடு குறைகிறது.

2.எடுகோள்கள்: பயன்பாடு எண்ணல் அளவையில் அளவிடப்படவேண்டும். நுகரப்படும் பண்ட அளவு ஒரே சீரானதாக இருக்க வேண்டும். நுகரப்படும் பண்டத்தின் எல்லா அளவுகள் ஒத்தத்தன்மையுடையவை. பண்டங்கள் கால இடைவெளியின்றி தொடர்ந்து நுகரவேண்டும்.

3.விளக்கம்:
4. எடுத்துக்காட்டு - விளக்கம்
5.அட்டவணை
6.வரைபடம், வரைபட விளக்கம்
7. குறைபாடுகள்.

42.அ). **சம அளவு உற்பத்தி கோட்டின் பண்புகள்:**
1. சம அளவு உற்பத்தி கோடு என்பது இரண்டு உற்பத்தி காரணிகளில் பல்வேறு இணைப்புகளில் ஒரே அளவிலான உற்பத்தியை தருவதாக காட்டுகிறது.
பண்புகள்: சம உற்பத்திக்கோடுகள் எதிர்மறை சரிவைக்கொண்டது.(வரைபடம்)
2. தோற்றுவாய் நோக்கி குவிந்து காணப்படும்(வரைபடம்)
3.சமஉற்பத்திக்கோடுகள் ஒன்றையொன்று வெட்டிக்கொள்ளாது(வரைபடம்)
4.உயர் சம அளவு உற்பத்தி கோடு உயர் உற்பத்தி அளவைக் குறிக்கிறது.(வரைபடம்)
5.சம உற்பத்திக்கோடு X அச்சினையோ Y அச்சினையோ தொடாது.(வரைபடம்)

42.ஆ) மொத்தச் செலவு(TC) = $10 + Q^3$, Q = 5 எனில் **AC,AVC,TFC,AFC** ஆகியவற்றை கண்டுபிடி.
மொத்தச் செலவு = $10 + Q^3$ எனில்

1. TFC = 10
   -------------
   AFC = TFC/Q = 10 / 5 =2
2. AFC =2
   ----------
   AVC =TVC /Q = $(Q^{3}/Q) = 5^3/5 = 125/5 = 25$
3. AVC =25
   ------------
   AC = AFC + AVC = 2 + 25 = 27
4. AC = 27.

43.**அ) நிறைவு போட்டியின் இயல்புகள்**(ஏதேனும் கீழ்க்கண்ட 5 தலைப்புகள் விளக்கத்துடன்)
1.எண்ணற்ற வாங்குவோரும், விற்போரும் கொண்ட ஓர் அமைப்பு
2.ஒரே தன்மையுடைய பண்டங்கள்
3.வாங்குவோர் மற்றும் விற்போர் அங்காடி நிலை பற்றி முழுமையாக அறிந்திருத்தல்
4.உட்புகுதலும் வெளியேறுதலும் தடையில்லை.
5. உற்பத்திக்காரணிகள் இடம்பெயரும்
6.போக்குவரத்துச் செலவு இல்லை
7.அரசின் தலையீடு இல்லை/மந்தன கூட்டு இன்மை

43.**ஆ)ரிக்கார்டோவின்வாரக்கோட்பாடு**

டேவிட் ரிக்கார்டோ விளக்கிய வாரக்கோட்பாடு தொன்மைக்கால வாரக்கோட்பாடாகும்.
இலக்கணம்: வாரம் என்பது நிலத்தின் உண்மையானதும் அழிக்கமுடியாததுமான சக்திகளை பயன்படுத்திக் கொள்வதற்காக நிலத்தின் விளைச்சலில் இருந்து ஒரு பகுதியை நில உரிமையாளருக்கு கொடுப்பதே ஆகும்.

**அனுமானங்கள்:** 1.நிலம் வளத்தில் வேறுபட்டது.2.வேளாண்மையில் குறைந்து செல் விளைவு விதி செயல்படுகிறது. 3.அமைவிடம் பொறுத்து வாரம் மாறும். 4. நிறைவு போட்டி நிலவுகிறது. 5.நீண்ட காலத்தை அடிப்படையாகக் கொண்டது.
கோட்பாட்டின் விளக்கம்:- மூன்று வகை நிலம்
வரைபடம்:
குறைபாடு:

**44.அ) இந்திய பொருளாதாரத்தின் வலுவான அம்சங்கள்:** (ஏதேனும் 5 தலைப்புகள் விளக்கத்துடன்)
1.இந்தியா ஒரு கலப்பு பொருளாதாரம்
2.வேளாண்மை முக்கிய பங்கு வகிக்கிறது
3.வளர்ந்து வரும் சந்தை
4.வளர்ந்து வரும் பொருளாதாரம்
5.வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரம்
6. வேகமாக வளர்ந்து வரும் பணிகள் துறை
7.பேரளவு உள்நாட்டு நுகர்ச்சி
8.நகரப் பகுதிகளின் விரைவான வளர்ச்சி

**44.ஆ) இந்திய ஐந்தாண்டுத்திட்டங்களின் செயல்பாடுகள்** (ஏதேனும் 5 தலைப்புகள் விளக்கத்துடன்)

1. முதல் ஐந்தாண்டுத்திட்டம்(1951 — 1955)
2. இரண்டாம் ஐந்தாண்டுத்திட்டம்(1956 — 1961)
3.மூன்றாம் ஐந்தாண்டுத்திட்டம்(1961 — 1966)
4.திட்ட விடுமுறை காலம்(1966-1969)
5.நான்காம் ஐந்தாண்டுத்திட்டம்(1969 — 1974)
6.ஐந்தாம் ஐந்தாண்டுத்திட்டம்(1974 — 1979)
7.சுழல் திட்டம்
8.ஆறாம் ஐந்தாண்டுத்திட்டம்(1980 — 1985)
9.ஏழாம் ஐந்தாண்டுத்திட்டம்(1985-1990)
10.ஆண்டுத்திட்டங்கள்
11. எட்டாம் ஐந்தாண்டுத்திட்டம்(1992-1997)
12.ஒன்பதாம் ஐந்தாண்டுத்திட்டம்(1997 - 2002)
13.பத்தாம் ஐந்தாண்டுத்திட்டம்(2002 - 2007)
14.பதினொன்றாம் ஐந்தாண்டுத்திட்டம் (2007 — 2012)
15.பனிரெண்டாம் ஐந்தாண்டுத்திட்டம்(2012 - 2017)

**45.அ) சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் நோக்கங்கள் பண்புகள்**
**நோக்கங்கள்:**
1.வெளிநாட்டு முதலீட்டை அதிகரிக்க முக்கியமாக வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஈர்த்து நம் நாட்டில் உள்ள மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்தல்
2.பன்னாட்டு வியாபாரத்தில் நமது பங்கினை அதிகரித்தல்
3.கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்
4.உலக அங்காடி தொழில் நுட்பங்களை பகிர்ந்து கொள்ளுதல்
5.வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்

**இயல்புகள் :**
1.பாதுகாப்புடன் கூடிய நிலப்பகுதிகள்.
2.தனி அமைப்பால் நிர்வகிக்கப்படுகிறது.
3.நெறிமுறைப் படுத்தப்பட்ட நடைமுறைகள்
4.தாராளமய பொருளாதார சட்டத்தில் நிர்வகிக்கப் படுகிறது.
5.இதில் அமையப்பெற்ற நிறுவனங்களுக்கு அதிக சுதந்திரம்.

**45ஆ.ஊரகப் பொருளாதாரத்தின் பண்புகள்** (ஏதேனும் 5 தலைப்புகள் விளக்ககங்களுடன்)
1.ஊரகம் ஒரு நிறுவனம் 2.வேளாண்மையைச் சார்ந்திருத்தல் 3.ஊரக மக்களின் வாழ்க்கை முறை 4.மக்கள் தொகை அடர்த்தி 5.வேலைவாய்ப்பு 6.வறுமை 7.கடன் சுமைகள் 8.ஊரகவருமானம் 9.சார்ந்திருத்தல் 10.குடிப்பெயர்ச்சி.

**46.அ.தமிழ் நாட்டில் உள்ள பல்வேறு வகையான ஆற்றல் வளங்கள் :** (ஏதேனும் 5 தலைப்புகள் விளக்ககங்களுடன்)
1.அணுமின் ஆற்றல் 2.வெப்ப ஆற்றல் 3.புனல் மின்சாரம் 4.சூரிய சக்தி மின்சாரம் 5.காற்றாலை மின்சாரம் 6.

**46.ஆதேவை விதி மற்றும் அதன் விதி விலக்குகள்**
தேவை விதி : விலை குறையும் போது தேவையின் அளவு அதிகரிக்கிறது விலை அதிகரிக்கும் போது தேவை அளவு குறைகிறது.
அனுமாங்கள் :நுகர்வோர் வருமானத்தில் சுவையில் தேர்ந்தெடுத்தலில் பழக்கத்தில் மாற்றமில்லை. பிற பொருள்களின் விலையில் மாற்றமில்லை பிற பதிலிகள் இல்லை பண்டத்திற்கான தேவை தொடர்ச்சியானது பண்டத்தின் தரத்தில் எவ்வித மாற்றமில்லை.
அட்டவணை
வரைபடம் (பண்டத்திற்கான அங்காடி தேவை )
வெப்ளன் விளைவு அல்லது பகட்டு விளைவு

47.அ. i) P=0 ii) p = 20 iii) P = 40 என்றால் **தேவை நெகிழச்சிக் கெழு மதிப்பு**
விடை : P = 60 – 0.2 ( 0 )

| | | |
|---|---|---|
| 0.2 Q | = | 60 – P |
| (0.2Q) 10 | = | (60 –P) 10 |
| 2Q | = | 600 – 10 P |
| | = | 600 – 10 P /2 |
| Q | = | 300 – 5 P |
| **தேவை சார்புச் சமன்பாடு** | = | 300 – 5 P |

1.P = 0 எனில் ed = 0
2.P = 20 எனில் ed = - 0.5
3.P = 40 எனில் ed = - 2

**47ஆ. பொருளியல் பற்றிய பல்வேறு இலக்கணங்கள் :**
1.செல்வ இலக்கணம் - ஆடம் ஸ்மித் - திறனாய்வு
2.நல இலக்கணம் - ஆல்பிரட மார்சல் - திறனாய்வு
3.பற்றாக்குறை இலக்கணம் - இலயனல் இராபின்ஸ் - திறனாய்வு
4.வளர்ச்சி இலக்கணம் - சாமுவேல்சன் - திறனாய்வு
முடிவுரை.

www.Padasalai.Net